[19th November 1963

கனம் திரு. எம் பக்தவத்சலம்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. வை. சங்கரன்: சிபார்சு செய்யப்பட்ட 91 பேரில் ஒருவரைத் தவிர மற்றவர்களின் விண்ணப்பங்கள் தள்ளப்பட்டதற்கு காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதில் பெரும்பாலோர் படிப்பு இல்லாதவர்கள். அதுதான் முக்கிய காரணம். 25 வயதிற்குக் கீழ்பட்டவர்களில் 707 பேர்கள் இல்லிட்டரேட்ஸ். 25-ல் இருந்து 45 வயது வரை உள்ளவர்களில் 853 பேர்கள் இல்லிட்டரேட்ஸ். 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் 80 பேர்கள் இல்லிட்டரேட்ஸ். 'பர்ஸ்ட் பார்ம் டு தேர்ட் பார்ம்' பாஸ் செய்தவர்கள் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் 43 பேர்கள். 45 வயது வரை உள்ளவர்கள் 50 பேர்கள். படிப்பு மிகக் குறைவாக இருப்பதால்தான் இவர்களை இந்த வேலைகளுக்கு எடுத்துக் கொள்ள முடியவில்லை.

திரு. வை. சங்கரன்: பொதுவாக வைரத் தொழில், நகைத் தொழில் போன்றவைகளில் ஈடுபட்டவர்கள் அத்தொழில்களை பரம்பரையாக செய்து வருவதால் அதிகப் படிப்பு இல்லாதவர்களாக இருப்பதால் அரசாங்கம் அவர்களுக்கு படிப்பு சம்பந்தமான விதிகளைத் தளர்த்தி அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஒரு வேலைக்குத் தகுதியான படிப்பு வேண்டும். படிப்பு விதிகளைத் தளர்த்துவதைவிட அவர்களுக்கு தகுதியான வேலை ஏதாவது பார்த்துக் கொடுக்கலாம்.

செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்

*281 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்தியமைக்கப்பட்ட புதிய கல்வித் திட்டப்படி ஹைஸ்கூல்களில் கீழ் வகுப்புகளில் 1963-64 கல்வியாண்டில், பழைய 1, 2, 3 பாரங்களுக்கு பதிலாக, இரண்டே வகுப்புகள் (VI and VII Standards) இருக்குமாதலால் அதன் காரணமாக ராஜ்யம் முழுவதிலும் பாதிக்கப்படும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு அரசாங்கம் என்ன வகையில் நிவாரணமளிக்க திட்டமிட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Under the Re-organization proposals given effect to from 1963–64, there will be three standards at the upper primary stage, viz., Standards VI, VII and VIII corresponding to the old Forms I, II and III, and not two standards only, as assumed by the Member. Hence secondary grade teachers will not be affected by the re-organization.